## மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை பயன்பாட்டிற்குக் கொண்டு வாரீர்!

# ரூ.2200 கோடியில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் “பூம்புகார் தொகுதி கழக உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேச்சு!

சென்னை, மார்ச் 24-

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசிய பூம்புகார் தொகுதி கழக உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்றும் ரூ.2200 கோடியில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு கூட்டுக் குடிநீர்த்திட்டம் தந்த முதல்வருக்கு நன்றி என்றும் குறிப்பிட்டார்.

பேரவையில் நிவேதா எம். முருகன் பேசியதாவது:

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் அவர்களை வணங்கி...

‘எல்லோர்க்கும் எல்லாம்” கிடைத்திட

அயராது பாடுபடும், திராவிட மாடல் நாயகர் எங்கள் தாயுமானவர்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி கழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் இளைய சூரியன் துணை முதலமைச்சர் அவர்களை வணங்கி அவை முன்னவர் அவர்களை வணங்கி மாவட்ட பொறுப்பு அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், என் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வணக்கம்.

என்னை இந்த சபைக்கு அனுப்பிய பூம்புகார் தொகுதி மக்களுக்கும், கூட்டணி கட்சி தலைவர்களுக்கும் நன்றி.

நமது கழக ஆட்சியில் தமிழ்நாடு, சுகாதாரம் கல்வி, வேளாண் மற்றும் தொழில் துறையில் சிறந்து விளங்குகின்றன.

**தமிழ்நாடு பட்ஜெட்! முன்னணி பத்திரிகைகள் பாராட்டு!**

நமது 2025-2026 பட்ஜெட்டை முன்னணி பத்திரிக்கைகள் மனம் உவந்து பாராட்டியிருக்கின்றன.

குறிப்பாக, தி இந்து நாளிதழ், பிசினஸ் லைன், டைம்ஸ் ஆப் இந்தியா, டெக்கான் கிரானிக்கல் உள்ளிட்ட ஆங்கில நாளேடுகள் நமது கழக அரசின் பட்ஜெட், கல்வி, சமூகநலத்திட்டங்கள் மற்றும் தமிழ்மொழி அருங்காட்சியம், விவசாயம் மற்றும் இராமநாதபுரம் விமானநிலைய திட்டங்களுக்கு முக்கியத்து வம் அளித்து இருப்பதாக பாராட்டு தெரிவித்துள்ளது.

நாடும், ஏடும் பாராட்டும் பட்ஜெட்டை தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், நிதித்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில், பட்ஜெட் வருவதற்கு 10 நாட்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் இலக்கியவாதிகளை வைத்து பெயர் கண்டுபிடித்து கொண்டு பட்ஜெட்டில் ஒன்றுமே இல்லை என பெயர் சூட்டிக்கொண்டிருந்த நேரத்தில்,

ஒன்றிய அரசோ, தமிழ்நாடு என்ற பெயரே பட்ஜெட்டில் வராமல் பார்த்து கொண்ட வேளையில்,

நமது தமிழ்நாட்டின் பட்ஜெட்டில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களின் பெயரை விட்டு விடாமல் குறிப்பிட்டு, அனைத்து மாவட்டங்களின் தேவைகளை அறிந்து அதற்கு திட்டங்களை அறிவித்தது.

பொதுமக்களையும், கூட்டணி கட்சி தலைவர்களையும் பட்ஜெட்டின் சிறப்புகளையும் ஆங்காங்கே பேசவைத்து பெருமை அடையும் சிறப்பான பட்ஜெட்டாய் திகழ்கிறது.

‘கல்வியை மையப்படுத்தி ஆட்சி நடக்கிறது

தமிழ்நாடு வளர்கிறது”

‘கல்வியை மையப்படுத்தி ஆட்சி நடக்கிறது

தமிழ்நாடு வளர்கிறது”

கடந்த காலங்களில் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியரை அணுகி தேர்ச்சி சதவிதம் கேட்கும் பொழுது 67 விழுக்காடு 77 விழுக்காடு 80 விழுக்காடு என்பதை சொல்லிய நேரத்தில்,

நமது திராவிட நாயகர் ஆளுமையாலும், அதன் துறையின் அமைச்சர் செயல்களாலும் அதனை மாற்றி அமைத்து, சரிசெய்து இன்றோ அதே தலைமை ஆசிரியர்களிடம் தேர்ச்சி சதவிதத்தை கேட்டால் 100 விழுக்காடு, 98 விழுக்காடு, 96 விழுக்காடு வெற்றி பெற்றுள்ளது என்று நெஞ்சை நிமிர்த்தி சொல்ல செய்த ஆட்சி நம் திராவிட மாடல் ஆட்சி.



**வறுமையின் அடையாளமல்ல; பெருமையின் அடையாளம்!**

நமது பள்ளிகல்வித்துறை அமைச்சர்

‘அரசு பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல, பெருமையின் அடையாளம்”

என்று சொல்லியும் அதே நேரத்தில் தனியார் பள்ளியும், அரசு பள்ளியும் ஒன்று தான் என்று மாணவர் மத்தியிலும், அரசு ஆசிரியர் மத்தியிலும் மக்களின் மனதில் ஆழமாக பதிய வைத்து வெற்றி பெற்ற மாடல் தான் எங்கள் திராவிட மாடல் ஆட்சி.

ஒன்றிய பட்ஜெட்டில் ஒன்றிய அரசோ கல்விக்கு நிதியை நாடு முழுவதும் குறைத்த நேரத்தில், மேலும் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.2500 கோடி கல்வி நிதியை கொடுக்க மறுத்து விட்ட நிலையிலும் “முன்பே பெய்து விட்டோம்” என்று மழையானது பெய்யாது இருந்தால்,

‘முன்பே விளைந்து விட்டோம்” என்று நிலமானது விளையாது இருந்தால்,

‘உலகிலுள்ள உயிர்களுக்கு வாழ்க்கை இல்லை”

என்னும் புறநானூறு பாடலுக்கிணங்க

முன்பே அதிகமாக நிதியை ஒதுக்கிவிட்டோம் என இல்லாமல் மீண்டும் மீண்டும் மாணவ செல்வங்களின் செல்வமாய் விளங்கக் கூடிய கல்விக்கு இந்த ஆண்டும் அதிகமான நிதியை ரூ.46,767 கோடியை ஒதுக்கி, எதை செய்தால் நாடு முன்னேறும், வீடு முன்னேறும் என்று அறிந்து இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் மாணவர்களுக்கு சொத்தாய் ‘Asset’ என விளங்கக்கூடிய கல்வியை மேலும் மேலும் மேம்படுத்தும் மாடல் தான் எங்கள் திராவிட மாடல்.

இன்று நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான ஆட்சியில், 3497 கோடி ரூபாயில் 7600 வகுப்பறைகள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டு திட்டத்தில் ரூ.18,000 கோடியில் புதிய வகுப்பறைகளை கட்டுவதை இலக்காக வைத்து நமது பள்ளிக்கல்வித்துறை சிறப்புடன் பணியாற்றி வருவதற்கு தமிழ்நாடு மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநீதி என்பது வெறும் வாய் சொல் அல்ல

அது எங்களின் கொள்கை என்று

இன்று சமூக நல திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது.

பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கு நடப்பு பட்ஜெட்டில் ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 17 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

**முத்தமிழறிஞர் கலைஞரை தவிர்த்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை பேச இயலாது!**

எவ்வாறு தமிழ்நாட்டில் திருக்குறளையும், திருவள்ளுவரையும் தவிர்க்க முடியாதோ அதே போன்று அரசியல் என்றாலும், தமிழ் என்றாலும் எங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை தவிர்த்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை பேச இயலாது.

‘கண்ணனும் காண்டிபனும் கலைஞர்”

‘கண்ணனாக இருந்து சொல்லெறிந்தவரும்

காண்டிபனாக இருந்து வில்லெறிந்தவரும்

எங்கள் கலைஞர்

போர், வன்முறை, ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், பிரிவினை வெறுப்புக்கு எதிராக பேசும் திருக்குறளை நம் கலைஞர் எளிமையான முறையில்மொழிபெயர்த்து நமக்கு பரிசளித்தார்.

அதனை மேலும், 45 உலக மொழிகளில் மொழி பெயர்த்து உலகுக்கே பரிசளிக்க உள்ளார் நம் திராவிட மாடல் தலைவர்.

மேலும் 45 உலக மொழிகளில் மொழி பெயர்க்க போகும், ஒரே முதல்வர்; என்ற சாதனையை படைக்க உள்ளார்.

இது உலக அரங்கில் தமிழுக்கும், தமிழருக்கும் கிடைக்க போகும் அங்கீகாரம். அதை தர உள்ளவர் என் முதல்வர் என்பதை நெஞ்சை நிமிர்த்தி சொல்லி நான் பெருமை அடைகிறேன்.

நாளுக்கு நாள் வளரும் தொழில் நுட்பத்தை தொலைவில் இருந்து பார்க்காமல் நம் அரசு கல்லூரி மாணவர்களின் கையிலே கொடுக்கும் வகையில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிகணினி வழங்கும் திட்டம் சிறப்பான திட்டமாய் நம் பட்ஜெட்டில் அமைந்துள்ளது.

இந்திய நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக குடிசை மாற்று வாரிய திட்டத்தை ஆரம்பித்தவர் டாக்டர் கலைஞர் ஆவார். தமிழ்நாட்டில் கடந்த ஆட்சியிலும், காலங்களிலும் யாரும் குடிசை இல்லா தமிழகம் அமைப்பேன் என்று அறிவித்ததில்லை. ஆனால் நமது திராவிட மாடல் முதல்வரோ கலைஞர் கனவு இல்லம் திட்டத்தை ஆரம்பித்து 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூரை இல்லா மாநிலமாக மாற்றி காட்டுவேன் என்று அறிவித்து ஒரே ஆண்டில் 1 லட்சம்; வீடுகளை கட்டி முடித்துள்ளது நமது ஆட்சியின் சாதனைகளில் ஒரு மைல் கல் என்பதை பதிவு செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்த ஆண்டு கலைஞர் கனவு இல்லம் திட்டத்திற்கு ரூ.3500 கோடி நிதி ஒதுக்கி ஒரு லட்சம் வீடுகள் கட்ட உள்ளது மேலும், சிறப்பு, சிறப்பு...

‘திராவிட மாடல்’ அரசின் மற்றுமொறு சாதனை!

இந்த பட்ஜெட்டில் மிக அருமையான திட்டம், யாருமே கவனிக்க முன்வராத நேரத்தில் தாய் உள்ளத்தோடு முதலமைச்சர் அவர்கள் தாய், தந்தை இல்லாத குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 18 வயது வரை கொடுத்து அவர்கள் வாழ்க்கையை வழிநடத்த பெரிதும் உதவியுள்ளார். இது நம் திராவிட மாடல் ஆட்சியின் மற்றொரு சாதனை ஆகும்.

மருத்துவ தலைநகராக தமிழ்நாடு வெற்றி நடை போடுகின்றது. சிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளுடன் சுகாதார துறை செயல்பட நடப்பு பட்ஜெட்டில் ரூ.21,906 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மனதார வரவேற்று மகிழ்கிறேன்.

நமது கழக அரசின் முயற்சியில் 10,187 கிராமங்களில் உள்ள 46000 ஏக்கர் தரிசு நிலங்கள் இன்று விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளது.

அதுபோல், மண்ணுயிர் காத்து, மன்னுயிர் காப்போம் திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 21 இலட்சத்து 35 ஆயிரம் விவசாயிகள் இன்று நமது கழக அரசின் சார்பில் பயனடைந்துள்ளனர்.

**“உழவர்களின் தோழனாய்” விளங்குகிறது நம் அரசு!**

அதுபோல ரூ.45,661 கோடி ரூபாய் நிதியை வேளாண்மைதுறைக்கு ஒதுக்கி, ‘உழவர்களின் தோழனாய்;” விளங்குகின்றது நமது அரசு. எங்கள் பகுதி விவசாயிகளின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல், திருநங்கைகளின் சமூக அந்தஸ்தை உயர்த்தும் வகையில், ஊர்காவல் படையில் திருநங்கைகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்ற அறிவிப்பு, புரட்சிகரமான அறிவிப்பு, இதன் மூலம் சமூகத்தில் திருநங்கைகளுக்கு மதிப்பு மிகுந்த இடத்தை தந்து இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்கிறது நமது கழக அரசு.

**முதியோருக்கு ‘அன்பு சோலை’ தந்த முதல்வருக்கு நன்றி!**

நாட்டிலேயே முதன்முதலாக முதியோர் உதவித் தொகை வழங்கிய நடைமுறைப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அதனை தொடர்ந்து முதியவர்களின் நலன் காக்க, தமிழகம் முழுவதும் 25 இடங்களில், 10 கோடி நிதி ஒதுக்கி முதியோருக்கு அன்பாய் ‘அன்புசோலை” தந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

தமிழரின் கடல் வணிக சிறப்புகளை அறியும் வகையில், காவிரிப்பூம்பட்டிணம் முதல் நாகப்பட்டினம் வரை விரிவான ஆழ்கடல் அகழாய்வு பணிகள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பிற்கு எனது மாவட்ட மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில் மகளிருக்கு எண்ணற்ற திட்டங்கள் தந்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திய சிறப்பான திட்டம் தான் ‘தோழி விடுதி” அதை பெரிய நகரங்களில் மட்டும் செய்து கொண்டு இருந்த நேரத்தில் சிறிய மாவட்டந்தோறும் விரிவுப் படுத்திய மாடல் தான் எங்கள் திராவிட மாடல் ஆட்சி. அதை மயிலாடுதுறைக்கும் தாருங்கள் தாருங்கள்.

எனது மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி மற்றும் மயிலாடுதுறை நகராட்சிகள், தரங்கம்பாடி, மணல்மேடு, மற்றும் குத்தாலம் பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 2200 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு துறை அமைச்சருக்கும் மனமார்ந்த நன்றி.

மேலும், எனது மயிலாடுதுறை மாவட்டத்தில், செம்பனார் கோவிலில் புதிய அரசு தொழிற்பயிற்சி மையம் அமைத்திட நிதி ஒதுக்கிய, தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னையில் உலகத்தரத்துடன் சென்னை அறிவியல் மையம்!**

மாணவர் நலனில் அக்கறைக்கொண்ட நமது சமூக நீதி அரசு, 100 கோடி செலவில், சென்னையில் உலகத் தரத்துடன் சென்னை அறிவியல் மையம் அறிவிப்பிற்கு நன்றி.

எதுவுமே இல்லை என்பது எதிர்க்கட்சிகளின் செய்தி. எல்லாமே இருக்கிறது என்பது எம் உலக தமிழ் மக்களின் செய்தி.

**தொகுதி கோரிக்கைகள்**

எனது மாவட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சி சார்பாக புதிதாக பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வராமல் இருக்கிறது.

முழுமையாக பயன்பாட்டுக்கு வரவேண்டும் என்றால் அணுகு சாலை உடனடியாக உளுத்துக்குப்பை முதல் மணக்குடி பேருந்து நிலையம் வரையும், மணக்குடியில் இருந்து மன்னம்பந்தல் கலெக்டர் ஆபிஸ் வரை முதல் கட்டமாக பணியை ஆரம்பித்தால் பேருந்து நிலையம் பயன்பாட்டுக்கு வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் குத்தாலம் ஒன்றியம் கங்கநாதபுரம் ஊராட்சியில் அரசு நிலம் ஐந்து ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் சுற்று வட்டாரம் முழுவதும் விவசாய நிலமாக இருப்பதால், வேளாண் விற்பனை கூடத்திற்கு சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல இருப்பதால் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை, நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். சட்டமன்றத்திலும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் உடனடியாக புதிதாக வேளாண் விற்பனை கூடம் ஆரம்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடி முதல் ஆடுதுறை சாலை ஒருபுறம் வீர சோழன் ஆறு மற்றொரு புறம் வாய்க்கால் விவசாய நிலமாக உள்ளது. சாலை முழுவதும் வளைவுகளாக இருப்பதால் அதனை நேர்படுத்தி அகலப்படுத்தி சாலை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இது என்னுடைய 10 கோரிக்கைகளில் ஒன்றாகவும் உள்ளது. தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அந்த சாலையை சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை மாவட்டம், கடராங்கொண்டான் முதல் காட்டுசேரி வரை சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. திருக்கடையூரில், அமிர்தகடேஷ்வரர்; திருக்கோயில் அமைந்துள்ளது. மின் தேவை அதிகமாக இருப்பதாலும் புதிய துணை மின் நிலையம் அமைத்து தர வேண்டும், என தொடர்ந்து சட்டமன்றத்திலும் வலியுறுத்தி பேசி உள்ளேன். அதனை விரைவாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க தில்லையாடி ஊராட்சியில் பிரசித்திபெற்ற அருள்மிகு சாந்தாரை காத்த சாமியும், அருள்மிகு பெரியநாயகி சுவாமி திருக்கோயில் உள்ளது. நீண்ட நாட்களாக தேர் பழுதடைந்து முழுவதும் சிதிலம் அடைந்துவிட்டது.

**தில்லையாடி கோவில் தேர் ஓடுவதற்கு ஆவன செய்யவும்!**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கோவில் தேர்களையும் ஓடவிட்டு கொண்டிருக்க திராவிட மாடல் ஆட்சியில் உலக பிரசித்தி பெற்ற தில்லையாடி கோவில் தேரை உடனே ஓடுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லுமாங்குடி கும்பகோணம் செல்லும் சாலை அதில் மயிலாடுதுறை மாவட்டச் சாலை மட்டும் அகலப்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதனை அகலப்படுத்தி நேர் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேப்போல, கல்லணை பூம்புகார் சாலை, கதராமங்கலம் குலத்தலப்பாடியில் இருந்து பூம்புகார் வரை சாலையை அகலப்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கும்பகோணத்தில் இருந்து சிதம்பரம் செல்லும், விக்கிரவாண்டி பைபாஸிலிருந்து பிரிந்து பந்தநல்லூர் வழியாக எனது மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் சாலை வரை சுமார் 15 கி.மீ. மட்டும் எனது மாவட்டத்தில் இருக்கிறது. அதனை உடனடியாக அகலப்படுத்தி நேர் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பூம்புகார் தொகுதி சின்னக்குடி ஊராட்சி நீண்ட நாள் கோரிக்கையான கட்டி முடிக்கப்பட்ட மீன் இறங்கு தளத்திற்கு படகு வருவதற்கு வழியாக அம்மன் ஆற்றின் குறுக்கே தடுப்பு சுவர் அமைக்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு அலுவலக அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்கு உடனே அனுமதி தந்து சின்னகுடி, சின்னம்மேடு, தாழம் பேட்டை மீனவ மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது பூம்புகார் தொகுதியில் சங்கரபந்தலிருந்து பெரம்பூருக்கு சுமார் 22 கி.மீ. தூரம் உள்ளது. அதற்கிடையில் 10 கி.மீ. தூரத்தில் உள்ள பொறையாரில்துணை காவல் நிலையம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**துணை காவல் நிலையம் தேவை!**

அதே போல பொறையாரிலிருந்து செம்பனார் கோவில் வரை 22 கி.மீ. உள்ளது. இடைப்பட்ட திருக்கடையூர் உலக பிரசித்திப் பெற்ற அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில் இருப்பதால் மக்கள் அதிகமாக கூடும் இடமாக உள்ளது. ஆகையால் அங்கு துணை காவல் நிலையம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தரங்கம்பாடி ஆடுதுறை ரோட்டில் எரவாச்சேரி செல்லும் வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதைபோல, தரங்கம்பாடி ஆடுதுறை சாலையில் கப்பூர் ஊராட்சிக்கு செல்ல வீரசோழ ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது பூம்புகார் தொகுதியில் மயிலாடுதுறை ஆக்கூர் இணைக்கும் சாலையில் பரசலூர் செம்பனார் கோயில் இடையில் புறவழிச்சாலை அமைத்து கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். எனது பூம்புகார் தொகுதியில் காட்டுச்சேரியில் தில்லையாடி வழியாக திருக்கடையூர் வரை சாலையை அகலப்படுத்தி தர வேண்டும்; என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நிவேதா முருகன் பேரவையில் உரையாற்றினார்.



உதகை நகர தி.மு.க. சார்பில், நகர கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையிலும், ஏற்பாட்டின் பேரிலும், உதகை நகர கழக அலுவலகத்தில் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளிய ஆதரவற்றோர் சுமார் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அரசின் தலைமை கொறடா கா. இராமச்சந்திரன் மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் பெரியம்மாபாளையம் கிராமத்தில், 4 பேரின் வீடுகள் மின்கசிவினால் விபத்துக்குள்ளானது கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., சார்பில் தலா ரூ.5 ஆயிரம் நிவாரணத் தொகையாக, எம். பிரபாகரன் எம்.எல்.ஏ., பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார் .மேலும் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தனது சொந்த செலவில் தலா ஒரு சிப்பம் அரிசி, காய்கறிகள், மளிகைப்பொருட்கள், வேஷ்டி, சேலை, போர்வை,பாய்,தலையணை உள்ளிட்ட நிவாரண பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்கி, ஆறுதல் கூறினார்.

## கிருஷ்ணராயபுரம் தொகுதி கடவூர் ஊராட்சி ஒன்றியம்

# இடையபட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்திட வேண்டும்!

## பேரவையில் திருமதி. க.சிவகாமசுந்தரி கோரிக்கை!

சென்னை, மார்ச் 24-

கிருஷ்ணராயபுரம் தொகுதி இடையபட்டியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தரப்பட வேண்டும் என்று பேரவையில் அத்தொகுதி உறுப்பினர் திருமதி. க.சிவகாமசுந்தரி கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

**க.சிவகாமசுந்தரி:** கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், இடையம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** கிருஷ்ணராயபுரம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், இடையம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடவூர் ஊராட்சி ஒன்றியம், டி. இடையபட்டி பகுதி மக்கள், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பதை முக்கியத் தொழில்களாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். டி. இடையப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புங்கம்பாடி, ஆலத்தூர், பூஞ்சோலைப்பட்டி, சுக்காம்பட்டி, நடுக்களம் ஆகிய கிராமங்களில், பசு 250 எண்ணிக்கையிலும், எருமை 320 எண்ணிக்கையிலும், செம்மறி ஆடுகள் 4,200 எண்ணிக்கையிலும், வெள்ளாடுகள் 5,400 எண்ணிக்கையிலும், கோழிகள் 22,000 எண்ணிக்கையிலும், பன்றிகள் 120 எண்ணிக்கையிலும், செல்லப் பிராணியான நாய் 450 எண்ணிக்கையிலும், ஆக 34,540 எண்ணிக்கையில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

இப்பகுதி மக்கள் கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்கவும், கால்நடைத் துறையின்மூலம் வழங்கப்படும் அரசின் உதவிகள் பெறுவதற்கும், கடவூர் மற்றும் தரகம்பட்டி பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் சிரமப்படு கின்றனர். ஆகவே, டி. இடையபட்டியில் அரசு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.

புதிய அரசு கால்நடை கிளை நிலையம் அமைக்கத் தேவையான அளவுகள் இருப்பதால் அவர்களின் கோரிக்கையை ஏற்று, டி. இடையப்பட்டியில் புதிய அரசு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** புதிதாக கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்றால், அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, ஏற்கெனவே செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலை யங்களுக்கு இடைப்பட்ட தூரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. கால்நடைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்திற்கு அதிகமாகவும், அந்நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் வேறு கால்நடை கிளை நிலையங்கள் இல்லாதபட்சத்தில் முதலில் கால்நடை கிளை நிலையம் துவக்கப்படுகிறது. பின்னர், அந்தப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்கு அதிகமாக உயரும்பட்சத்தில், அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படுகிறது.



அந்த கால்நடை மருந்தகத்திற்கு தினசரி 40 கால்நடைகளுக்கு மேல் சிகிச்சைக்கு வரும்பட்சத்தில், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுகிறது. உறுப்பினர் கோரியுள்ள கடவூர் ஊராட்சி ஒன்றியம், இடையப்பட்டியில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை. அக்கிராமத்தில் 2,770 மாட்டின அலகுகளும், 960 ஆட்டின அலகுகளும், 220 கோழியின அலகுகளும் என மொத்தம் 3,574 கால்நடை அலகுகள் உள்ளன. எனவே, உறுப்பினர் கோரியுள்ள இடையப்பட்டி அருகில், 3 கி.மீ. தொலைவிற்குள் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும் செயல்படவில்லை. எனவே, கடவூர் ஊராட்சி ஒன்றியம், இடையப்பட்டியில் முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இது குறித்து அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. சிவகாமசுந்தரி:** டி.இடையப்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, எனது தொகுதியின் தேவையைக் கருத்தில்கொண்டு விரைவாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், ரெங்கநாதபுரம் ஊராட்சிப் பகுதியான ரெங்கநாதபுரம், கட்டளை, நத்தமேடு, மலையப்பபுரம் ஆகிய பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் மாட்டின அலகுகள், 4,300 ஆட்டின அலகுகள், 2 ஆயிரம் கோழியின அலகுகள், பன்றிகள் மற்றும் நாய்கள் என மொத்தம் பத்தாயிரம் எண்ணிக்கையிலான கால்நடைகளை விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். இவர்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை செய்ய 6 கி.மீ. தூரத்திலுள்ள மாயனூர் கால்நடை கிளை நிலையத்திற்கு அழைத்துச் செல்லக்கூடிய நிலை உள்ளது. எனவே, விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, ரெங்கநாதபுரம் ஊராட்சி, கட்டளையில் புதிய அரசு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** கிருஷ்ணராயபுரம் தொகுதியில் சுமார் 50 ஆயிரம் மாட்டின அலகுகளும், 1 இலட்சத்து 25 ஆயிரம் ஆட்டின அலகுகளும், 2 இலட்சத்து 60 ஆயிரம் கோழியின அலகுகளும் உள்ளன. இவற்றிற்கு அனைத்து சேவைகளும் வழங்கும்விதமாக ஒரு கால்நடை மருத்துவமனையும், 21 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. தொலைதூரப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளின் கால்நடைகளுக்கு அனைத்து சேவைகளையும் வழங்கிடும்பொருட்டு, கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம், முதலமைச்சர் அவர்களால் 200 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகளின் சேவைகள் தொடங்கப்பட்டன. திங்கள் முதல் சனிக்கிழமை வரை கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு, இந்த ஊர்திகள்மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு மொத்தம் 6 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 3 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி மூலமாக மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு கால்நடை மருத்துவ சேவைகள் வழங்கும்விதமாக கூடுதலாக ஒரு கால்நடை மருத்துவ ஊர்தி இம்மாத இறுதிக்குள் செயல்படுத்தப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிப்பதோடு, உறுப்பினர் அவர்கள் புதிதாக அரசு கால்நடை கிளை நிலையம் வேண்டும் என்ற கருத்தை பல்வேறு இடங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது சம்பந்தமாக துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற வகையிலே துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.